<u>இராசிபுரம் நகராட்சி</u>

<u>நகர்மன்ற அவசரக் கூட்ட அறிவிப்பு</u>

2024–ஆம் வருடம் ஜுலை மாதம் 2–ஆம் தேதி செவ்வாய் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் அவசரக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 01.07.2024

தலைவர்,
நகர் மன்றம்.

<u>பொருள்</u>

( 1 ) இராசிபுரம் நகராட்சி 27 வார்டுகள் அடங்கிய முதல் நிலை நகராட்சியாக உள்ளது. இதில் தற்சமயம் 55259 மக்கள் தொகை உள்ளனர். தற்போது இராசிபுரம் நகராட்சியில் மக்கள் தொகை 61269 ஆக உயர்ந்து வளர்ந்து வரும் நகரமாக உள்ளது. ஏற்கனவே இயங்கி வரும் பேருந்து நிலையம் ஆத்தூர் 1சாலையில் இராசிபுரம் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. மேலும், சேலம், ஈரோடு மற்றும் நாமக்கலிலிருந்து இராசிபுரத்திற்கு வரும் பேருந்துகள் நகரின் வழியாக குறுகிய சாலை வழியாக நகரின் உள்ளே வருவதால் போக்குவரத்து நெரிசலுக்கு உள்ளாகி காலதாமதம் ஏற்பட்டு பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளுக்கும் மற்றும் அவசர மருத்துவ தேவைகளுக்கும் செல்ல இயலாமல் மிகவும் அவதிக்குள்ளாகி விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, பொது மக்களின் நன்மை மற்றும் இராசிபுரம் நகரின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு புதிய பேருந்து நிலையம் அமைக்க நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களின் நிருவாக அனுமதி பெற நகர் மன்ற பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(1890/24/இ1)

**தீர்மானம் எண். 580**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி